©
தமிழ்நாடு அரசு
2022

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 0.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 33] சென்னை, புதன்கிழமை, ஆகஸ்ட் 17, 2022
ஆவணி 1, சுபகிருது, திருவள்ளுவர் ஆண்டு–2053

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழில் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண். 94, தொழில்கள் (MME1)த் துறை, 09 மே 2022.]*

1957ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்படுத்துதலும், முறைப்படுத்துதலும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 67/1957) 15ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு சிறு கனிமங்கள் சலுகை விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார். அவையாவன:

**திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில்,

(1) விதி 2-இல், பகுதி (5–A)வுக்குப் பின்னர் பின்வரும் பகுதி சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

(5–AA) ‘‘கிரானைட் கழிவு’’ என்பது அளவில் 15 செ.மீ. x 10 செ.மீ. க்கும் குறைந்தளவிலான பரிமாணங்களையுடைய, கிரானைட் பாளமாக விற்பனை செய்யப்படுவதற்குரிய இயல்பற்ற, சாலை அமைப்பதற்கான சரளைக் கல்லாகப் பயன்படுத்தக்கூடிய, செயற்கை மணல் தயாரிப்பதற்காகவும் அல்லது ஏனைய யாதொரு நோக்கத்திற்கான மூலப்பொருள் என பொருள்படும்’’.

(2) விதி (8–A)இல், துணை விதி (12)–க்குப் பின்னர், பின்வரும் துணை விதி சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

‘‘(13) கிரானைட் கழிவு, மாவட்ட ஆட்சித்தலைவரின் அனுமதியுடன் சாலை அமைப்பதற்கான சரளைக் கற்களாக அல்லது செயற்கை மணல் தயாரிப்பிற்காக அல்லது ஏனைய யாதொரு நோக்கத்திற்காக விற்பனை செய்யப்படலாம், கழிவுக்கான உரிமக் கட்டணம் டன் ஒன்றுக்கு ரூ. 100/– (ரூபாய் நூறு மட்டும்)’’ ஆகும்.

*[அரசாணை (நிலை) எண். 95, தொழில்துறை, 09 மே 2022.]*

1957ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்படுத்தலும், முறைப்படுத்தலும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 67/1957) 15ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு சிறு கனிமங்கள் சலுகை விதிகளில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார்.

**திருத்தம்**

மேற்சொன்ன விதிகளில், விதி 12-இன், துணை விதி (2—A)-இல் பகுதி (f)-இல், பின்வரும் வரம்பு நிபந்தனை சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

"ஆனால் இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் அல்லது மாநில நெடுஞ்சாலைகள் அல்லது இருப்புப் பாதைகளின் திட்டப்பணிகள் உள்ளிட்ட யாதொரு உண்மையான பொது நோக்கத்திற்காக அனுமதிக்கான கால அளவு, ஓராண்டிற்கு மிகாமல் இருக்க வேண்டும்."

**எஸ். கிருஷ்ணன்,**
அரசு கூடுதல் *தலைமைச் செயலாளர்.*

**ந. அருள்,**
*இயக்குநர் (மு.கூ.பொ.)*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.